# பரம்பரைக் கொண்டாடும் நாயகன்
# டாக்டர் அப்பாராஜு பிள்ளை L.M.S O.B.E
## 125 ஆம் ஆண்டு 3.11.1897 பிறந்தநாள் நினைவு அஞ்சலி





கண்ணெதிரே ஒரு சாய்வு நாற்காலி
கால சக்கரத்தில் தொலைந்து போன
நாட்களை மீட்டெடுக்க
கூட்டிச் செல்லும் டைம் மெஷின்
அது அம்மாவுக்கு!

கூடத்தின் தாழ்வாரத்தில்
சாளரத்தைஒட்டி வைக்கப்பட்டிருக்கும்
சாய்வுநாற்காலி.
அதில் ஒருமுறை அமர்ந்துப்
பார்த்திட விருப்பப்படாதவர்
எவரும் இல்லை.

சோர்வை மட்டும் நீக்கிட அல்ல.
புது உற்சாகத்தை சேர்த்து
அளித்திடும் மந்திர நாற்காலி.



தன் தந்தை அமர்ந்து
ஓய்வெடுக்கும்

சாய்வு நாற்காலி
அவருக்கான ஞாபக பொதி.



தடுமாறி வந்து அமர்ந்து
வாஞ்ஜையாய்
அதன் கைகளை
தன் தளர்ந்த கைகளால்
வருடிப் பார்க்கிறாள்.

தேக்கு மரத்தில் இன்னமும்
உறுதியாய் பளபளப்பாக
தான் இருக்கிறது.

பின்னுக்கு சாய்ந்து தன்னை
ஆசுவாசப்படுத்திக் கொண்டு
கண்களைமூடிக் கொள்கிறாள்.

கண்ணெதிரே கருப்பு
வெள்ளையாய்
காட்சிகள் விரிகிறது.



அரண்மனைப் போல வீடு
அவர் இதயத்தைப்
போல விசாலமாய் விரிந்துக்
கிடக்கிறது.

சுற்றி முற்றிப்பார்த்து
ஸ்தம்பித்து நின்ற சிறுவன்
அவள் கொள்ளு பேரன்.

இவ்வளவு பெரிய வீட்டை
கட்டியது யார் என்கிறான்.

எனது அப்பா தான் என்று
கூறியவளிடம்
உன் அப்பாவைப் பற்றி சொல்லேன்
என்கிறான் கண்கள் விரிய...

கதை கேட்டு வளரும் பருவமல்லவா...
உறுதியான கொள்கைகளையும்
பண்புகளையும் விதைப்பது
மா மனிதர்களின் வரலாறு.

அவரைப் பற்றிய தகவலை
நம்தலைமுறைக்கு கடத்தி விட
வேண்டுமல்லவா..

கண்களை
மெல்ல திறந்து பார்த்தவள்
அவனது உச்சத் தலையை
வருடி முத்தமிட்டு மடியில்
அமர்த்திக் கொண்டு தொடருகிறாள்...



அப்பாவுக்கெல்லாம் ராஜா
எங்க அப்பா
அப்பா ராஜூ தான்.

பார்வைக்கு கம்பீரமானவர்.
எல்லாருக்கும் அன்பானவர்
உதவும் மனப்பான்மை கொண்டவர்
திட்டம் போட்டு சட்டத்திற்குள்
வாழ்க்கையை
அமைத்துக் கொண்டவர்.
பண்பு தவறாத ஒழுக்கமானவர்.
எட்டு திக்கும் புகழ் பரவ வாழ்ந்தவர்.

கோபக்காரர் கண்டிப்பானவர்
என்ற வர்ணிப்பே
எங்களை அவரிடம்
நெருங்கவிடாமல்
தயங்கி நிற்க செய்தது .

எட்டி நின்று ரசித்த அவருடைய
நான்காவது பெண் நான்.



அவர் பிறந்து படித்து வளர்ந்தது
தரங்கம்பாடி என்னும் ஊர்.

மருத்துவபடிப்பு முடித்து பட்டம்
பெற்றதெல்லாம் சிங்கப்பூர்

இரண்டாம் உலகப் போர் காலத்தில்
ராணுவத்தில் சிறந்த
முறையில் மருத்துவராக
பணியாற்றியவர்.

அவரது உழைப்பை மெச்சி
பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம்
அவருக்கு அளித்த பரிசு
தங்க மெடல் ஒ பி இ.
(Order of British empire)



நாடு திரும்பிய அவர் குடும்பத்துடன்
குடியேறிய ஊர் தஞ்சாவூர்.

அரண்மனைப் போல் விஸ்தாரமாக
இரண்டு அடுக்குகள் கொண்ட
ரசனையுடன் கட்டப்பட்ட முற்றம்
வைத்த தூண்கள் நிறைந்த வீடு.

காற்று மழை வெயில் எல்லாம்
கைகோர்த்து எங்களுடன் விளையாடும்.

விடுமுறை நாட்களில் வேடந்தாங்கலாக
மாறி விடும் உறவினர் வருகையால் .

இனிப்பு பலகாரங்கள் வாசம் மூக்கை
துளைக்க விருந்திற்கு பாரம்பரியமாக
எங்கள் குடும்ப உணவு அப்பஞ்சலா
அனைவருக்கும் பரிமாறப்படும்.



மூன்று ஆண் பிள்ளைகளுக்கும்
உயர்ந்த கல்வியளித்தும் ஐந்து
பெண் பிள்ளைகளையும்
பள்ளிக்கு அனுப்பி கல்வியோடு
நற்பண்புகளையும்
ஊட்டி வளர்த்தவர்.



மனைவி மீது
தீரா காதல் கொண்ட அவர்
மரம் செடி கொடிகளையும் உயிராய்
நேசித்தார்

சமயத்தில்
தோட்டக்காரனாகி விடுவார்.

அவர் நட்ட மாமரங்களும் பலா மரமும்
இன்னமும் அவரது தோப்பில்
கனிக்கொடுக்கிறது.

வீட்டு நுழை வாசல்
வலப்பறத்தில் செம்பருத்தி
குரோட்டன்ஸ்
.

எதிரே தெய்வீக மணம் கமழும்
பவளமல்லி மரம்.

நித்தம் விடியலில் கொட்டிக்
கிடக்கும் பூக்களை தென்னை
ஓலையில் வேய்ந்த நீண்ட
கூடையில் நிரப்பி பக்கத்து
பெருமாள் கோவிலின் பூஜைக்கு
அர்பணிப்பது வழக்கமான நிகழ்வு.



வலது புறத்தில் பலா கொய்யா
மரங்கள். பழம் விளையும்
காலத்தில் கூட்டம் கூட்டமாக
படையெடுக்கும் மந்திகள்.

கொல்லைபுரத்தில் நீர்
இரைக்க பெரும் கிணறு.

கிணற்றின் வலது புறத்தில்
கருவேப்பில்லை மரம் மாமரம் .



வீட்டின் சுற்றுவாக்கில்
கொய்யாமரம்
நார்த்தை மாதுளை மரம்
எலுமிச்சை மரம். சுண்டை
செடி முருங்கை வாழைமரங்கள்.

மணம் முடித்து சென்ற பின்பும்
வருடம் தவறாமல்
பலகாரக்கூடைகள்
பழக்கூடைகளோடு
அவரின் பாசமும்
வீடு வந்து சேரும் பார்சலாக.

அக்கம் பக்கத்திலிருப்பவர்களின்
அவசரத்திற்கு மருத்துவ
சிகிச்சை செய்வதற்கு அலுக்காதவர்.

கடை கண்ணிக்கு பேருந்துவையே
நாடும் எளிமையானவர்.

எளியவர்களுக்கு உதவி செய்யும்
பாங்கும் ஊர் பெரியவராக
சுதந்திர தினத்தில் கொடியேற்றி
மரியாதை செய்யும் தேசப் பற்றுமாய்

பார்பவர்கள் வியந்து கொண்டாடிய
மனிதம் நிறைந்தவர்.

.உண்மையில் அவர் நம் குலசாமி.

நமது தலைமுறையின் பரம்பரை
நாயகன்.

அவர் இல்லாத வீடு
அரண்மனையானலும்
இன்று அனாதையாக
தான் நிற்கிறது.

மனதில் நிறைந்து தளும்பும்
நினைவுகள்
கண்ணீர் துளிகளாகி வழிகிறது.

அவளது கண்களை அழாதே
என்று தன் பிஞ்சு விரல்களால்
துடைத்தவன்...

தாத்தா வாங்கின
தங்க மெடல் எங்கே காட்டு
பார்கணும் என்கிறான் ஆவலாக... .





-------- ராஜலட்சுமி

----ராஜமனோஹரி (தங்கம்)

